# Arputha Alangara = = = Thasarathna =

# Chinthamoney.

BY

S. S. Doraisamy Navalar.

KOLAR.

1917.

Q6:417
N17
175973



**J. M. J.**

வேளாளர் காணியென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தின்கண்
திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிலங்காநின்ற
அர்ச். ஆரோக்கிய மாதாபேரில்

# அற்புத வலங்காரத் தசரத்நச்
# சிந்தாமணி.

வண்ணச் சிந்துகள் முதற் பிரபந்தம்.


இஃது

கோலார் விகட விக்வ சிங்கமும் வரப்பிரசாத
சித்திரக்கவி நாவலருமாகிய
**கனம் சா. சே. துரைசாமி பிள்ளை யவர்களால்**
இயற்றப்பட்டு,

கோலார் கோல்ட்பீல்ட் தங்கவயலில் ஸ்தாபகமாயிலங்கும்
அர்ச். அமலோற்பவ லூர்து மாதாவின் திருபஜனை
அர்ச் ஜெபமாலை மாதாவின் திருபஜனை
அர்ச். சூசைமா முனிவரின் திருபஜனை
அர்ச் சவேரியாரின் திருபஜனை
வாணியம்பாடி ஒதியமாநகர்
அர்ச். அந்தோனியாரின் திருபஜனை
சேலம் சூரமங்கலம்
அர்ச். அந்தோனியாரின் திருபஜனை
சபையார்களின் பெருமுயற்சியாலும் பொருளுதவியாலும்
அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

மெர்க்குரி பிரஸ்,
மஹா விகடதூதன் ஆபீஸ்,
சென்னை.
1917.

# ரதபந்தனம்.


நீ
லி க மி
மா ர் க் கோ ன்
ப பா ர் பொ கா ளி ஞு
ஜெ நீ ல ன் ய அ லி செ க
நீ லி ம தா இ ம மா த் யெ ய் தி
ரி சி ன் ந் க் ய் யே ணி ம தா ன் கூ ர்
க ய தே லா ரோ தா ரி ட் கு ன் பா
சே ஜெ த் ல் ளா கொ ற் ம ன்
டி மா தி மெ ற தி சு
மு ணி மி யை லே
ன் ஷ பூ
மீ

## இரதபந்தன [illegible] கலித்துறை.

மீன்முடி சேகரி நீஜெப மாலினீ மின்னுகதிர்
பான்கலை பூஷணி நீஜெய சீலினீ பார்க்கொளிசெய்
கூன்மதி ணையமிதி தேன்மலர்க் காலியென் குற்றமெல்லாந்
தான்பொறுத் தாட்கொளா ரோக்கிய மாமரி தாய்மணியே.

### 1-வது சக்கரத்துள் ளடங்கிய செய்யுட்கள்.

மாமணி மீனணி சேகரி வாநீ—மாமணி நீதிரு சாகரி வாநீ
மாமணி நீகரு ணாகரி வாநீ மாமணி நீகிரு பாகரி வாநீ
நீகரு ணாகரி மீனணி சேகரி—நீகிரு பாகரி நீதிரு சாகரி
மாமணி நீகிரு பாகரிவா—மாமணி நீகரு ணாகரிவா
மாமணி மீனணி சேகரிவா—மாமணி நீதிரு சாகரிவா
மணிமீ னணிசே கரிவாநீ—மணிநீ கிருபா கரிவாநீ
மணிநீ திருசா கரிவாநீ—மணிநீ கருணா கரிவாநீ
கருணாகரி யணிசேகரி—கிருபாகரி திருசாகரி

### 2-வது சக்கரத்துள் ளடங்கிய செய்யுட்கள்.

சீரணி மாஜெய மாமரி யாயே—சீரணி நீயென்னை யாதரி தாயே
காரணி நீதிரு மாமரி யாயே—காரணி நீயென்னை யாதரி தாயே
மாஜெய மாமரி நீயென்னை யாதரி—நீதிரு மாமரி நீயென்னை யாதரி
சீரணிஜெய மாமரி—காரணியென்னை யாதரி
காரணிதிரு மாமரி—சீரணியென்னை யாதரி
மாஜெய மாமரி யாயே—நீயென்னை யாதரி தாயே
நீதிரு மாமரி யாயே—நீயென்னை யாதரி தாயே
சீரணிஜெய மாமரியாயே—சீரணியென்னை யாதரிதாயே
காரணிதிரு மாமரியாயே—காரணியென்னை யாதரிதாயே
ஜெயமாமரி யென்னையாதரி—திருமாமரி யென்னையாதரி.

### வேறு ஏகநாகபந்தன சித்திரக்கவி.

நேரிசை வெண்பா.

பாமணிநீ, சேணிலமார், பானு, கலைவாணி
தூமணி, யேவாநீ, தூயமார், மாமதூர
வாமணி, யேதூயே, வாச, கவிபாட
மாமணியே, நீதா, மதி.

### சத்தபங்கி சித்திரக்கவி.

கட்டளைக் கலித்துறை.

சீர்பூக், தருள்மலர், மாமரி, யேயருள், சீரணியே
கார்பூத், தருள்மலர், காமரி, யேதிரு, காரணியே
பேர்பூத், தருள்மலர், பூமரி, யேபரி, பூரணியே
தார்பூத், தருள்மலர், தாமரி, யேநெறி, யாரணியே.

இந்த சத்தபங்கியில்

கட்டளைக் கலித்துறைகள் 3, கலிவிருத்தம் 1, வஞ்சி விருத்தம் 1, கொச்சகம் 1, வெண்பா 1, ஆக-7. செய்யுட்களடக்கம்.

# சாத்துக்கவி.

சென்னை மஹா விகடதூதன் பத்திராதிபர்

**பா. அ. அ. இராஜேந்திரம் பிள்ளை யவர்கள் கூறிய**

ஆசிரிய விருத்தம்.

ஒப்பேது மில்லாத வுயர்வரத்தால் நிறைந்தகதி
ருடையி னானை
யும்பர்கணஞ் சூழ்ந்திறைஞ்சு முயர்சுதனை யளித்ததவ
வுரிமை யானை
முப்போதுங் கன்னிமையிற் குன்றாத தெய்வருண்
முடியி னானை
மூதறிஞர் புகழ்வேளை நகர்வாழு மாரோக்ய
முதல்வி தன்னை
எப்போது மறவாது சிந்தனைசெய் துரைசாமி
யெனுநா வல்லோன்
இன்னிசைக ணீடுதச ரத்நச்சிந் தாமணிப்பே
ரினிய நூலை
இப்போதுஞ் செந்தமிழா விசைத்துதா யுரிமைதனக்
கிலக்கு மாகி
இருநிலத்திற் பெரும்புலமை விளங்கபெருந் தகைமுடிபூண்
டெழுந்தா னம்மா.

J. M. J.

# அற்புத வலங்காரத்

# தசரத்நச் சிந்தாமணி.

காப்பு-நேரிசை வெண்பா.

காட்சிதிகழ் வேளாளர் காணியெனுஞ் க்ஷேத்திரத்தில்
மாட்சிதிக ழாரோக்ய மாமணிமேல்—தாட்சியுடன்
அற்புதசிந் தாமணியை யான்பாட சேசுபரன்
கற்பகசிந் தாமணிதாள் காப்பு.

## அர்ச். சூசை மாமுனிவர் ஸ்துதி.

விருத்தப் பண்.

அற்புத வலங்கார நவரத்ந மயமணி
யாரோக்ய மாமணி யின்மேல்
அற்புத வலங்கார தசரத்ந மணிமாலை
யருள்பூத்த சிந்தா மணி
கற்பனை யலங்கார சொற்சுவை நயங்களுங்
கனிந்தொழுக பாடு தற்கு
கற்பக வலங்கார சூசைமா முனியேய
கழலிறையுஞ் சினனருள் வரம்

## வித்யா குரு ஸ்துதி.

கட்டளைக் கலித்துறை.

முன்னூல்வழிநூலுஞ் சார்புநூல் முத்தமிழ்முற்றுணர்ந்தோன்
றென்னூற் சதுரக ராதிதேம் பாவணி சொல்லிதந்தோன்
என்னூற்க ளாலும் புகழ்வீர மாமுனி யென்பவரென்
றன்னூற்கு மாசீ ரளிக்கும்வித் யாகுரு தாணமஸ்தே.

அவையடக்கம்-கலிப்பாப்பண்.

பூமணி முத்து பொன்மணி மாலைக்கு
போலி மணிமுத்து மலர்மணி பொருந்துமோ
பாமணி முத்து பண்மலர் மாலைகள்
பாடும் பாவலர் நாவலர் முன்புயான்

மாமணி சிந்தா மணிமலர் மாலையை
மரியாரோக்கிய மாமணி பேரினில்
நாமணி சிந்தி சைத்திங்கு பாடினேன்
நன்மணி சிந்தென் றேற்கக் கடனதே.

## வரம்.

இ ம். திருப்புகழ்பண் ஆதிதாளம்.

சிரத்தி லொளிதவழ் தாரகை முடிபுனை ஜெயசீலி
சிறப்புற் றணிதிகழ் சூரிய கலையணி திருமேலி
கரத்திற் சுடர்மலி பாலனைத் தழுவியேந் தியசூலி
களிப்புற் றுலகெலாம் போற்றிடுஞ் சசிமிதி மலர்காலி
பரத்திற் பரனொடு வீற்றர சியற்றிடும் பரிபாலி
பணிவுற் றயர்வுறும் பாவிகட் கடைக்கல வநுகூலி
வரத்தி புகழ்மிகு சோபித நவமணி ஜெபமாலி
வணங்கி யடியவன் பாடிட வரமருள் மரியாயே.

ஷை வேறுசந்தம் ஆதிதாளம்.

சிந்தாரம் பாடியடி யேனுனது பாதமலர்
கந்தாரத் தேனைகுடித் தேமனதி லேமகிழ்ந்துச்
சிங்கார மாகவினிப் பானபிர சங்கமதைச்
செய்வேனே நான் செய்வேனே.

மந்தாரம் வாழுங்கடற் சூழும்புவி மீதினிலே
நந்தாத மாமணிசிந் தாமணியெந் தாய்மணிநீ
வந்தாள வேணும்நமஸ் காரம்நமஸ் காரந்திரு
மரியாயே திரு மரியாயே.

---

## முதல் சிந்தாமணி.

வேளாளர் காணி நகரச் சிறப்பு.

தெள்ளு தமிழ்க் குதவுசீலன் என்ற காவடிச்சிந்து
வர்ணமெட்டு.

இ-ம்.-காப்பி-ஆதிதாளம்.

அற்புதங்கள் செய்யுஞ் சிந்தாமணி எங்கள்
ஆரோக்ய மாமரியெந் தாய்மணி வீற்
றரசுபுரியும் வேளாளர்—காணிநகர் சிறப்பைத்
தானே சொல்லு வேனே.

கற்பகந் தெங்குபனஞ் சாலை-பலாக்
கமுகுகதலி மாஞ் சோலை-தேன்
கந்தம்பரி மளித்து—சிந்துமலர் பொழில்கள்
சூழும் உயிர்கள் வாழும்.

2

நாகைநகர்க் தென்றும்நற் சீராம்-அந்த
நகர்க்குத் தெற்குகடற்கு நேராம்-திரு
நாணிப்பணியும் வேளார்—காணியெனுஞ் சிங்காரப்
பேராம் பேரூராம்.

3

வாகைகொடி பறக்கு மேலே-கடலை
வாவென் றழைக்கும்விதம் போலே-உயர்
வானத்து லாவுமுகிற்—சேனைத் தளத்தைக் கையி
னாலே தொட்டாற் போலே.

4

தேடிவருஞ் ஜனங்கள் கூட்டம்-திரளாய்
தினந்தின மானந்தக்கொண் டாட்டம்-மாதா
திருநாளிதே பேரின்பப்—பெருநாளிதே யெவர்க்கும்
நாட்டம் இல்லை வாட்டம்.

5

பாடிவரும் புலவோர் சங்கம்-பாடும்
பதங்கள் பேரின்ப பாட லெங்கும்-மனதில்
பத்திநம்பிக்கை சிநேகம்—புத்தியறி வானந்தம்
பொங்கும் புகழ் தங்கும்.

6

சனங்கள் குடியிருக்கும் வீடும்-எங்குஞ்
சத்திரங்கள் சுற்றிலும் நீடும்-பலரும்
சாதிவித்தி யாசமின்றி—சோதிதேவா லயத்தில்
நாடும் ஒன்றாய்க் கூடும்.

7

மனங்களெல்லா மொன்றாகச் சூழ்ந்து-தேவ
மாதா மலர்க்கழலில் தாழ்ந்து-மிக்க
மகிழ்ச்சியுடன் மன்றாடி—புகழ்ச்சி கொண்டானந்தத்தி
லாழ்ந்து வரும் வாழ்ந்து.

8

தேவுல குக்குவழி காட்டும்ஏங்கள்
தேவக்தாயார்க்குச் செய்மன் றாட்டும்-இந்த
திருநாட் கொண்டாடும் பேரை—யொருநாள் மோக்ஷால
கூட்டும் முடி சூட்டும். [யத்தில்

9

நாவலன் துரைசாமி பிர பந்தம்-பாட
நல்வரங்கள் தந்தன ளனந்தம்-செல்வ
நாயகிவாழ் வேளநகர்—தூபதேவா லயத்தின்
சுகந்தம் எங்கும் முந்தும்.

10

---

## 2-வது சிந்தாமணி.

மாதா இரதாரோஹண பவனி சிறப்பு.

பொன்னுலவு சென்னிகுள நன்னகர் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-காபி-ஆதிதாளம்.

சுந்தஞ்சூழ் நந்தாவனங்களில் சிந்துந்தேனருவிபாயுங்
காக்ஷிசூழ் வேளாளர்காணி யூரிலே-வெகு
மாக்ஷியாய் விளங்கும் புட்பத் தேரிலே-மிக்க
கம்பிர மாய்வரும்—உம்பர்கள் ராக்கினி
நம்பினோ முன்றிரு—செம்மலர் பதமதைக்
கண்களால் கண்டோங் களித்தோம் நேரிலே-ஞானப்
பண்களைப் பாடித்துதிப் போம்-பாரிலே.

1

சுந்திர வுடுமுடியுஞ் செந்தினகரன் கலையுஞ்
சந்திரப் பதவழகுங் கண்டனம்-கண்டு
சிந்தையில் மகாமகிழ்ச்சி கொண்டனம்-ஞானச்
சோதியை யருள்பரஞ்—சோதியைக் கரமலர்
மீதினி லேந்திபிவ்—வீதியெலாம் வலஞ்
சுற்றிநீ வருங்காட்சியுங் கண்டனம்-கண்களில்
பற்றியுன் பதமலர்த்தேன் உண்டனம்.

2

விண்ணுலகில் வாழுஞ் ஜெய சிலசபை யோர்களுஞ் சுரர் [களும்
விண்ணகர்க் கரசியென்று சாற்றவும்-தங்களைப்
பண்ணவனைப் பெற்றவளென்று போற்றவும்-சத்ய

வேதக் கல்யாணி—வேதப்ர மாணி
நீதக் கல்யாணி—நீதப்ர மாணி
விரத்தி வரத்தி யென்று சாற்றவும்-அம்
பரத்திசுந் தரத்தி யென் றேற்றவும்.

3

மண்ணுலகில் வாழுமன் னுயிர்க் கெலாம்நீ மாதா வென்றுன்
மைந்தன் சொன்ன வாக்கியத்தை யெண்ணியே-நாங்கள்
வந்துனைச் சந்தித்து ஜெபம் பண்ணியே-கன்னி
மரியே கருணு—கரியே கிருபா
கரியே பரமேஸ்—பரியே யென்று
மங்களம்பாடி வாழ்த்துவோ முன்னையே-நாளும்
எங்களையாள்வ துன்கடன் அன்னையே.

4

கஞ்சமலர் செஞ்சரணை யஞ்சலென்றுந் தஞ்ச மென்றுங்
கெஞ்சியழுதுச் செபித்துக் கொஞ்சியே-நிற்கும்
பஞ்சைக ளெங்கட்டு அப ரஞ்சியே-தெய்வக்
கன்னி யுடுமுடி—சென்னியே விற்
பன்னியே பிர—சன்னியே திரு
கருணைப் பேரின்பரச நெஞ்சியே-மரணத்
தருணத்துதவும் ஞான வஞ்சியே.

5

வஞ்சலகை யுஞ்சரீர முஞ்சகமுச் சத்துருக்கள்
பஞ்சபாதகங்கள் செய்யச் சொல்லியே-தூண்டுது
சஞ்சலத் துன்பங்கள் உயிர்க் கொல்லியே-மன
வாதனை தந்திரச்—சோதனை களிலுஞ்
சாதனை யுன்றிருப்—பாதமே நம்பினேம்
வந்துதவி செய்யவேணு மெல்லியே-இந்த
சிந்துசூழ் புவிக்கு ஞானத் தல்லியே.

6

சத்திய வேதம் புகழுஞ் சித்திரப் பொற்பாவை யுன்னை
நித்தியம் பணியு மெங்கட் காகவே-உன்றன்
புத்திரனை வேண்டி நீயன் பாகவே-மனச்
சஞ்ச லந்துயர்—பஞ்சம் படைபிணி
யெஞ்சிடா மலுன்—கஞ்சமலர் திரு
சரண நிழலில் குடி யாகவே-வாழ்ந்து
மரண மடையச் செய்முன் பாகவே.

7

நித்திய னிகரிலா     னிராதர னிராமயனே
நீணிலத்தில் பெற்றநற் கல்     யாணியே-அந்த
வானிலத்தி லுற்ற மகா.     ராணியே-எங்கள்
    நேரியே உப—காரியே தயை
    வாரியே யருள்—மாரியே பொழி
நிமலியமலி யென்     பிராணியே-என்றும்
விமலிநிமலி யெனப்ர     மாணியே.

8

மூவுல கராக்கினிநீ     ஜீவர்களின் பாக்கியம்நீ
முப்பொழுதுங் கன்னிகைநீ     யுண்மையே-எங்களை
யெப்பொழுதுங் காப்பதுநீ     யுண்மையே-ஞான
    மூலிநீ ஜெய—சீலிநீ யநு
    கூலிநீ ஜெப—மாலிநீ திரு
முத்துபரி சுத்தமும்நீ     யுண்மையே-ஆதி
வித்துவேத புத்தகம்நீ     யுண்மையே.

9

நாவலன் துரைசாமியின்     நாவிலுமனக் காவிலுஞ் சொற்
பாவிலும் பரிமளிக்குங்     கந்தமே-இந்த
பூவில்நீசெய் புதுமைக     ளனந்தமே-உன்னை
    நாடியே நிதந்—தேடியே விரைந்
    தோடியே மன்—றாடியே வரும்
ஞானிக ளஞ்ஞானி கட்கும்நீ     சொந்தமே-கலைக்
கியானிகள் நிதம்பாடிடும் பிர     பந்தமே.

10

---

## 3-வது சிந்தாமணி.

மாதா மாசில்லாம லுற்பவித்துப் பிறந்த
ஜனன சிறப்பு.

பாதி ராத்திரி வேளையில் என்ற வர்ணமெட்டு.

இராகம்-பைரவி ஆதிதாளம்.

ஆகிபிஸ்திரி யேவை யென்பவ
னாலே வந்தது     பாவம்—அதி
னாலே தேவனுங்     கோபம்—கொண்டு
அளித்தா ருலகுக்குச்     சாபம்—இந்த
அழிவைக் கண்டந்த—ஆதனே வையும்
    அடைந்தார் களேமனஸ் தாபம்.

1

சோதியிஸ்திரி வேறொருத் தியைத்
தோன்றச் செய்வேன் மண்மேலே—அந்தத்
தூயக்கன்னியி றைமேல—புவி
துலங்கிடு மினி மேமேலே—என்று
சுருதி யாய்ப்பரஞ் சோதிநாயகன்
சொன்ன வாக்கது போலே.

2

மன்னன்றாவிது குலத்திலுயர்தவ
மணிகளா மிரு பேபரே—அன்னம்
மாட்சுவீக்கி னென் போரே—நெடு
மலடரவர் களி னேரே—திரு
மகளைப் பெருவீரென்—றமலத் தூதனால்
வாசனித் தார்பர னாரே.

3

சொன்ன வாக்கது போலவேஜன்ம
கோஷமற்ப மில் லாமலே—கற்ப
துன்பமொன்று மில் லாமலே—சிறு
தொனி யழுகையு மில் லாமலே—கன
சுடர்மணிக ளணியணி—கலெலா மிவட்
சுடருக் கிணையொன் றில்லாமலே.

4

எண்ணரும்பல புனிதங்களு மிவ
ளிருதயத்தினில் ஜொலித்திட—பே
ரின்ப மணம்பரி மளித்திட—இவட்
கெல்லா வரங்களும் பலித்திட—திரி
யேகதேவ னெழுந் தருளி—யிவ
ளெழிலக்கண் டுள்ளங் களித்திட.

5

விண் ணகர்க்கிவ ளாசியாகி
விளங்க சுரர்க்கு மே லாகவே—நவ
விச்சித்திர வுரு வாகவே—சத்ய
வேதத் துக்குவொளி யாகவே—இந்த
விமலக் கன்னியின்—திரு வயிற்றிலே
கடவுள் மனுவுரு வாகவே.

6

வருவதற்கிவள் திருவயிறொரு
வயிர அரண்மனை யாகவும்—அதில்
வரங்கள் பதிந்தெழி லாகவும்—அதா
வணக்கத்துக் குரிய தாகவும்—இந்த
வடிவுகளாலலங் கரித்துப் பிறந்தனள்
வானும் புவிமகிழ் வாகவும்.

7

திருவளரவிவ ளுருவமுடலமுந்
திங்கட் பிறையென வளரவும்—இவள்
திருவிழியி லருள் வளரவும்—மன
தினில் மெஞ்ஞானமும் வளரவும்—இவள்
திரிவயதிலொரு தவசியாகிநற்
றேவாலயத்தினில் வளரவும்.

8

மூவுலகுமிவள் மொழிக்குள் ளடக்கமே
முதல்வனு மிவட்குள் ளடக்கமே—சூரர்
முத்தர்களு மிவட் கடக்கமே—மறை
முறைநெறி யிவட்குள் ளடக்கமே—இந்த
மூன்றுலகிலுள்ள-ஜீவாத்மகோடிகள்
முழுதுமிவட் கைக்குள் ளடக்கமே.

9

நாவலன் துரைசாமி புகழ்ஜெய
நாயகி மதுர நாயகி—பல
நவங்கள் செய்யுஞ் செல்வ நாயகி—தனை
நம்பினவர்க் கின்ப நாயகி—அந்த
நரகவலுசர்ப்பத் தலையை நசுக்கின
நாயகி யிந்த நாயகி.

10

## 4-வது சிந்தாமணி.

### மாதா மகவருட் சிறப்பு.

இ-ம். மஞ்சுலிகர் குந்தளமின்னே— அடதாளம்
என்ற வர்ணமெட்டு.

அம்மணி யாரோக்ய மாமணியே-நவமணியே-தவமணியே
அற்புதவலங்காரப் பாமணியே எங்கள்
ஆருயிர்க்குயிரானகல்மணி-பாருயிர்க்கெலாம்பாக்யவிண்மணி
யன்பர்களிதய நேசமே-அனுதினமும்-ஈனத்துயரை
யாற்றியே தேற்றும் விஸ்வாசமே.

1

சம்மனசோர்கட்கும் ராக்கினியே-மோக்ஷராக்கினியே-வேதசாட்சிகள்
சகல அர்ச்சியர்கட்கும் ராக்கினியே மன
சஞ்சலத்துயர் பஞ்சம்படைபிணி வஞ்சனைப்புரியுஞ்சத்ராதிகள்
சகலத்துன்பங்களில்நின்று-கற்காருமென்று-மன்றாடும்மேர்க்கு
சமயத்துதவும் ராக்கினியே.

2

வான்புவிபடைக்குமுன்னையே-தமதிரித்வ-தேவாதிதேவன்
வரங்களால் சிங்காரித்தானுன்னையே என்றும்
வான்புவிக்கலங் காரமாய்சிங் காரமாய்மங் காததிருவுரு
வான்சுரர்க்கெல்லாமேலாகவே-படைத்துஅவர்-திருவுளத்தில்
வைத்திருந்தாருண்மையாகவே.

3

தான்புவியில் மனிதனுக்கவே-பிறந்துலகை-ரட்சிப்பதற்குத்
தாயாயுன்னைத் தெரிந்தன்பாகவே ஞானத்
தங்கமே திரு தங்கமே புனி தங்கமானதி லங்கமாயவர்
தரித்து எடுத்தக்காயமே-சாட்சியெங்கட்கு-இதையறிந்துன்
முன்வணங்கிப் போற்ற ஞாயமே.

4

கன்னிமகிமைக் கெடாமலே-அற்புதமாக-கற்பவதியாய்
கஸ்தியொன்றும் நீபடாமலே ஆதி
கர்த்தனைப்பரி சுத்தனைத்திரு முத்தனைச்சதா நித்தனையிந்தக்
காசினியில் பெற்றெடுத்தாயே-அவர்க்குனது-முலைப்பால்தந்து
கட்டிமுத்தம் நீ கொடுத்தாயே.

5

வன்னிரகப்பேய்கள் கலங்கவே-வானத்தில் வானோர்-ஞானசங்கீத
வாழ்த்துகள் பாடியிலங்கவே                                    நவ
மாகதோன்றிய மீனொன்றால்வழித் தானறிந்துமூ வேந்தர்கூடியே
வந்துன்மைந்தனைக் கண்டுவுய்யவே-பொன்போளந்தூபம்-மூன்றுங்கா
    வைத்து பதமலர் முத்திசெய்யவே.                    [ணிக்கை

6

விண்டலத்தி லோர்சுடரிலே-முச்சுடர்தோன்றி-ஒன்றாய்ஜொலித்து
விளங்கிடக் கண்டாரந்நாளிலே                              வெகு
விந்தையாகவே நந்தவனங்களில் கந்தமலர்களால் சிந்துந்தேன்மணம்
வீசியெங்கும் பரிமளித்ததே-பாடும்பட்சிகள்-வண்ணங்கள்சந்த
    விருத்தங்கள் பாடிக்களித்ததே.

7

மண்டலத்திலெங்குமிருந்த-தந்திரப்பேய்கள்-நரகில்வீழ்ந்து
மனங்கலங்கி நொந்துவருந்த                              அவைகளின்
மாயத்தந்திரத் தாலுண்டாக்கினப் பேயின்கோயில்க ளுஞ்சிலைகளும்
மண்ணில்வீழ்ந்துடைந்ததல்லவோ-இவைகளெல்லாம்-உனதுசெல்வ
    மைந்தன்செய்த சூட்சியல்லவோ.

8

மூவுலகமும் வாழ்த்தும்நல்லவன்-சஷ்டலட்சணன்-சச்சிதானந்தன்
முத்தொழில் நடாத்தும்வல்லவன்                              ஆதி
மூலனருள்வளர் நூலன்ஜகபரி பாலனுருவளர் சீலன்திருவளர்
மூர்த்தியுன்றன் பாலனல்லவோ-தேவனைப்பெற்ற-தேவமாதாநீ
    மோக்ஷராக்கினி நான் சொல்லவோ.

9

நாவலன்துரை சாமிதோத்ரியே-ஞானமேயின்ப-ஞானமேசெல்வ
நாயகி காலைநட்சேத்ரியே                              பாடும்
நாவிலுஞ்சொற் பாவிலுமனக் காவிலும்நடனஞ் செய்து
நல்வரமருளும் பூஞ்சரணி-உமக்கனந்த-தோத்ரம் பேரின்ப
    ஞானசங்கீதரத் னுபரணி.

10

---

## 5-வது சிந்தாமணி

### ஸ்துதி

இராகம்—இந்துஸ்தான்-காபி-ஆதிதாளம்

ஞான மிருந்தமணி என்ற வர்ணமெட்டு.

ஆரோக்ய மாதாவெனும் அம்மணியென் கண்மணி
அற்புதங்கள் செய்யுஞ் சிந்தாமணி—உன்றன்
ஆலயத்தைத் தேடியேவிரைந் தோடியேமன் றாடியே வந்தேன்
அம்மணி—யருள்புரி—யம்மணி.

1

பாரோர்க் கிரங்கியருள் ஞானசௌ பாக்யமே
பக்தர்களின் செல்வ சலாக்கியமே—உன்றன்
பாதமலரை நாடியேமன் றாடியேதமிழ் பாடியேவந்தேன்
பாருமே—யென் றுயர்—தீருமே

2

புதுமைகளாற் சிறக்கும் வேளாளர்க் காணியே
பணணியங் கட்சுரக்குஞ் சேணியே—ஞானப்
பூவேலீ பூவேரோசா பூவேயென்றன் நாவாலுன்பதம்
போற்றினேன்—பாமலர்—சாற்றினேன்.

3

மதுமாமலர் சோலைசூழ் வேளாளர்க் காணியே
மண்ணோரை விண்ணிற் சேர்க்குந் தோணியே—ஜெப
மாலிகதிரணி மேவியுடுமுடி சீலிமதிமிதி காலிஜகபரி
பாலியே—மெய்மறை—நூலியே.

4

வான்சுரர் கட்குமோக்ஷ வாசிகட்கும் ராணியே
வரங்க ளளிக்கும் நற்கல் யாணியே—கருணை
வாரியேவுப காரியேயருள் மாரியேபொழி நேரியேவிசு
வாசியே—மகா—ராசியே.

5

நான்விரும்பு மெஞ்ஞானத் தேன்கரும்புன் பாதமே
நாவுக் கின்பந்தரும் புநீதமே—பாவ
நாசனே வுயிர்நேசமே விசுவாசமே பிரகாசமே மதுர
நாயகி—யேழைகள்—தாயகி.

6

காலையிலே யுதிக்குங் காலைநட் சேத்ரமே
கருணை நிறைந்த ஞான பாத்ரமே—ஜகக்
காரணிபரி பூரணியரு ளாரணிமரி பேரணிதெய்வக்
கன்னியே—யுடுமுடி—சென்னியே.

7

மாலையிலே ஜெபிக்கும் பிரியகத்த மந்த்ரமே
மைந்த ரெங்கட்குநீ சுதந்தரமே—ஜய
மங்களமேசுப மங்களமேஞான சங்கீதமே யெங்களிங்கிதமே
பர-மானந்தமே—பேரின்—பானந்தமே.

8

பாவலர்கள் புகழ்ந்து பாடும்பிர பந்தமே
பாரிலெ வர்கட்கும்நீ சொந்தமே—ஞான
பாக்கியமே சலாக்கியமே வேதவாக்கியமே ஆரோக்கியமே
யுன்-பட்சமே—ஆயிரம்—லட்சமே.

9

நாவலன் துரைசாமியின் மனம்வாக்குக் காயமே
நாளுமுனக்குச் சொந்தம் ஞாயமே—மெஞ்
ஞானமுஞ்சமா தானமுஞ்ஜெபக் கியானமுந்த்யான
மோனமுங்கொடுத் தாளுமே—யெந்த—நாளுமே.

10

---

## 6-வது சிந்தாமணி.

### ஸ்துதி

என்னடிநான் பெற்றமங்கை என்ற வர்ணமெட்டு.

இராகம்-ஆதிதாளம்.

அற்புதங்கள் செய்யும் பூவே-லீலீ பூவே-ரோசா பூவே
எங்க-ளணியே ஆரோக்ய மாதாவே—மனம்
அஞ்சாதுனைக் கெஞ்சிமிக கொஞ்சிபருள் தஞ்சமென்
றருந்தவந்தேன் செழுந்தேனே—கொடுத்து
ஆள்வதுன்றன் கடன்றானே.

1

கற்புக் கலங்காரப் பூவே-லீலி பூவே-ரோசா பூவே
ஞானக்-கனியே ஆரோக்ய மாதாவே—உன்னைக்
கண்டுமகிழ் கொண்டுமது வுண்டுவரும் வண்டுகளைக்
களிப்புறச் செய்யுஞ் செந்தேனே—கொடுத்து
காப்பது நின் கடன்றானே.

2

ஞானமணங்கமழ் பூவே-லீலி பூவே-ரோசா பூவே
மெஞ்-ஞானிகள் வாழ்த்து மாதாவே—ஞான
நலமேவளர் குலமேசுக நிலமேஜய பலமேயருள்
ஞானப் பேரின்ப செந்தேனே—உண்ண
நாடிவந்தேனைை நானே.

3

வானலங்கார பூங்காவே-லீலி பூவே-ரோசா பூவே
எங்கள்-வாழ்வே ஆரோக்ய மாதாவே—ஞான
வரமேசுந் தரமேமந் திரமேஅம் பாமேவிஸ்
வாசப்பேரின்ப செந்தேனே—உண்ண
வருந்திவந்தே னைை நானே.

4

புண்ணிய மணங்கமழ்பூவே-லீலி பூவே-ரோசா பூவே
ஞானப்-பூவே ஆரோக்ய மாதாவே—மனம்
புத்தியொடு சித்தமதில் பத்தியெனும் வித்தைநிதம்
பூரிக்கச் செய்யுஞ் செந்தேனே—தந்தால்
பூவே யுன்னை மறவேனே.

5

எண்ணிய வரமருள்பூவே-லீலி பூவே-ரோசா பூவே
எங்கள்-எழிலே ஆரோக்ய மாதாவே—உல
கெங்கும்புகழ் தங்கப்பிர சங்கஞ்சொல இங்குன்னருள்
இன்பச் சுகானந்தத் தேனே—தந்தால்
என்று முன்னை மறவேனே.

6

சத்ய வேதம்புகழ் பூவே-லீலி பூவே-ரோசா பூவே
எங்கள்-சலுகையாரோக்ய மாதாவே—ஞான
சத்தே திரு முத்தே பரி சுத்தர் மன வித்தே யுன்
சலசமலர் பதத்தேனே—குடித்து
சந்தோஷமாய் பாடுவேனே.

7

நித்ய வாழ்வைத்தரும் பூவே-லீலீ பூவே-ரோசா பூவே
எங்கள்-நிலையே ஆரோக்ய மாதாவே—வேத
நிதியே உன்னதியே சந்நிதியே யென்கதியே நான்
நேசித்துன்பத மலர்த்தேனே—குடித்து
நிந்தாஸ்துதி பாடுவேனே.

8

பாவலர் புகழ்ஞானப்பூவே-லீலீ பூவே-ரோசா பூவே
எங்கள்-பாக்யம் ஆரோக்ய மாதாவே—ஞானப்
படமே குறிப்பிடமே இருப்பிடமே நற்றிடமே யருள்
பாதமலரூறுந் தேனே—புகழ்ந்து
பாடிநிதங் குடிப்பேனே.

9

நாவலன் துரைசாமி நாவே-புகழ் பூவே-ஞானப் பூவே
எங்கள்-நலமே ஆரோக்ய மாதாவே—வேத
நந்தாமணி நிந்தாமணி சிந்தாமணி யென்தாய்மணி
நாவுக்கின்பந் தருந்தேனே—நிதமும்
நான்குடித்து மகிழ்வேனே.

10

---

## 7-வது சிந்தாமணி.

மாதாசெய்த புதுமைகளின் சிறப்பு.

இ-ம். தோடி-சாப்புதாளம்.

(செந்தின்மாநக ரந்தனில் என்ற வர்ணமெட்டு.)

அன்னம்மாள்பெற்ற பொன்னம்மா நீயெங்கள்
அம்மம்மாவுன்னையே நம்பினோம் மனதை
அலையவிட்டுலகிலே வெம்பினோம் உலகில்
முன்னம்மாநீயந்த எரோணிமென்பவனைப்பேய்
மோசத்தந்திரத்தி லாதரித்தாயே அந்த
நீசப்பேய்க்கு விலங்கிட் டெரித்தாயே.

1

175973

காலியாவெனும் ராச்சியமானதில்
கண்களால் கண்டுன்னைப் பூசிக்க மனதில்
கருதின வொருசந்தி யாசிக்கு ஜெய
சீலி நீயதிகப்ர காசத்துட னெழுந்து
திருமுகத் தரிசன மளித்தாயே அவ்
விருவிழிகளால் கண்டுக் களித்தாரே.

2

பாரிஸெனு நக ரானதி லுன்பெயரைப்
பரியாசஞ் செய்தவோர் யூதனை வெட்டிப்
பதைக்கக் குத்திமற்றொரு யூதனைச் செய்த
வீரிய துரைமகன் றனக்கிடர் நேராமல்
விந்தை செய்தாயேநீ யம்மணி பக்தர்
சிந்தையி லெழுந்தருள் கண்மணி.

3

உத்திராதியெனும் ராச்சியமானதில்
ஓர்பாவி யாத்துமந் தன்னையே தனித்
தீர்ப்புச் செய்யவுன்மகன் முன்னையே விட்டச்
சத்துராதிப் பேய்கள் மனங்குன்றி நாணவும்
தயைவைத் தவனைமீட்ட ரட்சகி பேய்கள்
பயமுற் றலரச்செய்யுஞ் சிட்சகி.

4

மோகப் பாவத்திலே தாகமாய்த் திரிந்த
மூர்க்கப் பாவியொரு சேவகன் கோவில்
பார்க்கப் போபதற்குள் மேவவுன் பாலன்
தேகமெங்குங் காய மாகி சென்னீரொழுகி
சிந்தக்கண்டுருகி யழுதானே மனம்
நொந்துன் றனைமன்றடித் தொழுதானே.

5

காமப் பாவத்தினல் வேறொரு வாலனுங்
கடூரக் காய்ச்சல்கொண்டோ ரிரவிலே இருக்கக்
கருத்தப்பேய்கள் வந்து விரைவிலே அவனைக்
கட்டியே நெருப்புக் கிணற்றில்போடவவன்
சுகரியழுது ஜெபஞ் செய்யவே வந்து
உதவிசெய்தாயே அவன் உய்யவே.

6

புண்ணியனொரு துரையின் பெண்ஜாதிதன்
புருஷன்மீதில் சந்தேகங் கொண்டு அவள்
பிராணனைப் போக்கிக்கொண்டதைக் கண்டு அந்த
புண்ணிய துரையுன்மேல் நம்பிக்கை வைத்தழுது
புரிந்த மன்றாட்டைநீ கேட்டாயே பிராணன்
பிரிந்தவட் குயிர்தந்து மீட்டாயே.

7

உரோமைமாநக ரானதிலே வேத
துரோகி யூலியானெனும் ராசனும் சத்ய
விரோதியாகுமந்த நீசனும் மிக்கக்
குரோதமாய்க் கிறிஸ்துவர் பேரில் படையெடுத்துத்
கொல்ல நினைந்தவன் றன்னையே கொன்று
நல்லவர்களைக் காத்த அன்னையே.

8

பத்தி மிகுந்தவோர் உத்தமியின் சொந்த
பர்த்தாவெனுந் துஷ்டப் பாவியால் கொன்ற
பால னுயிர்பெற்றுப் பூவின்மேல் மிக்க
சத்தியாகவே வாய் திறந்து பேசசெய்து
சற்குணவதியை யாதரித்தாயே அந்த
துற்குணன் றனக்காக்கினைக் குறித்தாயே.

9

பாவசங்கீர்த்தனஞ் செய்யவோர் பாவிக்கு
பக்திவரக் கிருபை செய்தாயே நல்ல
புத்தி வரவருட் பெய்தாயே நாளும்
நாவலன் துரைசாமி பாடுஞ்செந்தமிழ்ச்செய்யுள்
நன்மணம் பரிமளித் தெங்குமே வீச
நின்மணம் வைத்தருள் தங்கமே.

10

## 8-வது சிந்தாமணி.

### விண்ணப்பம்.

இ-ம். நாட்டை-அடதாளசாப்பு.
(திருவுற் றிலகுகங்க என்ற வர்ணமெட்டு.)

அம்மணி யாரோக்யமரி யம்மணியே யுன்னருளால்
அற்புதச் சிந்தாமணியைப் பாடினேன் உன்றன்
பொற்பதச் சிந்தாமணியில் சூடினேன் என்னை
ஆதரிகரு ணாகரிகிரு பாகரிம னோகரியென
தாருயிர்க்குயிர்நீ பேரா னந்தமே நானுன்
சீருயர்த் திருவடிக்குச் சொந்தமே.
1

எழுத்துச்சொற் பொருளுடனே யாப்பணிகளென்னுமைந்
திலக்கண வழுக்கள்மிகுந் தாலுமே அதைத்
துலக்கஞ்செய் தெனக்கருள்நற் சீலமே என
தெண்ணமேதமிழ் வண்ணமேஞான சொன்னமேயரு ளன்னமேயுனை
எப்பொழுதும் நான்மறவேன் திண்ணமே மரணத்
தப்பொழுதுங் காப்பதுன்கடன் முன்னமே.
2

ஆசிரியப்பாவெண்பாக் கொச்சகப்பாக் கலிப்பாவென்னும்
ஆனந்தப்பாக்களாலுன்னை வாழ்த்தவே மெஞ்
ஞானந் தந்தருளென்னையான் தாழ்த்தவே மனம்
அஞ்சிடாமலே கெஞ்சினேன்மிக கொஞ்சினேனப ரஞ்சியேயெனை
வஞ்சனைச் செய்யாமல்வரந் தாருமே என்றன்
நெஞ்சகத்தி லுள்ளத்துன்பந் தீருமே.
3

சந்தத்தாழி சைக்கலித்துறை விருத்தப் பாவினத்தால்
சந்தசத கந்திருப்புகழ் சாற்றுவேன் நீசெய்
விந்தைகளைச் சொல்லியெங்குந் தூற்றுவேன் பிரப
சங்கமேசெய்யத் துங்கமேவரம் பொங்கமேயருள் தங்கமேதுரை
சாமிநாவலன் விகட சிங்கமே என்
பூமிநாற்றிசையுஞ் சொல்லிவி ணங்குமே.
4

ஆசுமதுர ஞ்சித்ரவித் தாரகவி பாடுதற்குன்
ஆசிரருளம்மணி யென் கண்மணி உப
தேசிகுரு நீயெனக்கு விண்மணி நான்
ஆடுவேன்கூத் தாடுவேன்மன் றாடுவேன்கொண் டாடுவேனிதம்
ஆனந்தக் கூத்தாடியுன்புகழ் பாடுவேன் மனத்
தானந்தக் கண்ணீரையுன்கழற் சூடுவேன்.

5

காப்பியங் கோவைப்புராணக் காவியங் கலம்பகமுங்
கற்பனைநயத் தோடுன்மேல் பாடவே எல்லா
விற்பனர்களு முன்னைக்கொண் டாடவே உன்
காலையேதொழும் வேலையேயென் வேலையேயலால் வேலைவேறிலை
கல்வியை யெனக்குச்சொல்லித் தாருமே ஞானச்
செல்விநீ விழிதிறந்து பாருமே.

6

கவிகமகன் வாதிவாக்கி நால்வர்கள் முன்நானடியேன்
கற்றடங்கி யுன்புகழை கூறவே என்னைப்
பெற்றவளே-செய் தருள்நான் தேறவே இன்பக்
கருணையமே அருளுதயமே பரமேஸ்பரியுன் சரணம்புயமென்
கண்கள்கண்டானந்தக் கண்ணீ ரூற்றுமே ஞானப்
பண்கள்பாடி வாழ்த்திநிதமும் போற்றுமே.

7

மெஸ்மரீஸம் ஹிப்னடிஸம் பர்ஸனல் மாக்டிஸமென்னும்
மேல்நாட்டு சாஸ்திரத்தில் நான் தேறவும் ஞான
நூல்நாட்டத்தி லென்னுள்மன மாறவும் மன
மெய்விழித்திறந் துய்வழியையும் மைவிழிக்கொளியைத்தருந்திரு
மெய்வழியைக் காட்டியென்னைத் தேற்றுமே உலகப்
பொய்வழிப் போகாமலென்னை மாற்றுமே.

8

என்மரண வேளையி லெழுந்தருளி வந்தெனக்கு
நன்மரணந் தந்தெனத்மந் தன்னையே பரமன்
பொன்மலர் சிம்மாஸனத்தின் முன்னையே விட்டு
ழையென்றனை வாழவைத்தருள் சூழுமுத்தர்க ளோடுநித்தமும்
ரகனைப்பணிந் திரைஞ்சிப் போற்றவே மனு
தகனைப் புகழ்ந்து பாக்கள் சாற்றவே.

9

பாவலர்முன் சித்ரகவி நாவலன் துரைசாமி சொற்
பாவிலேவசித்திடும் பொற் பாவையே மனப்
பூவிலே வசித்திடும் நற் பூவையே செல்வப்
பாக்யமேநல் வாக்யமே சலாக்யமே ஆரோக்யமேயுன்
பாதமலர்க் கென்றும் நமஸ் காரமே சத்ய
வேதங் குன்றுநீத வலங் காரமே.

10

---

## 9-வது சிந்தாமணி.

### ஸ்துதி

இராகம் சாமா-அடதாள சாப்பு.

அந்தரத்திலெழுந் சந்திரனைமிதித்த சுந்திரப் பொற்பதத்தி
யருள்வரத்தி கொடைகரத்தி யெனைத் திருத்தி—நிதம்
ஆட்கொள் தயாபரத்தி. 1

நீ-சந்தமுமென்றன் சிந்தையிலேகுடி வந்திருக்கத்தானே
சிந்தித்தேனே சந்தித்தேனே வந்தித்தேனே—இது
சத்தியஞ்செந் தேனே, 2

சத்தியவேத மகத்துவமேஞான உத்தம புத்தகமே
என்தத்துவமே என்வித்தகமே என்சத்துவமே—என்
சர்வமகத்துவமே. 3

நீ-நித்தியமென்னைத் திருத்திநடத்திநற் புத்திசொல்லம்மணியே
என்கண்மணியே என்பண்மணியே என்பொன்மணியே—என்றும்
நிர்மலப் பெண்மணியே. 4

காலைமாலையுன்றனன் காலைமுத்தஞ்செய்யும் வேலையெனக்கருளே
மதியருளே பதியருளே விதியருளே—யென்
கதிநீயரும் பொருளே. 5

செழும் பாலுந்தேனுஞ்சீனிப் பாகுங்கனிரசம் போலுன்பதமினிக்கும்
பார்த்தாலினிக்குந் தொட்டாலினிக்குந் தெவிட்டாதினிக்கும்—என்
பாடலெல்லா மினிக்கும். 6

பஞ்சம்படைபிணி சஞ்சலத்துன்பங்கள் மிஞ்சிடாமலொழிய
துன்பமொழிய மழைப்பொழிய பயிர்விளைய—இந்த
பாருயிர்கள் தழைய. 7

உன்-கஞ்சமலர்சர ணஞ்சரணமென்றுக் கெஞ்சும்பெரியோருஞ்
சிறியோரும் சபையோரும் பலபேரும்—வாழ்க
கருணையருட் கூறும்.

காமிகளாகும்வீண் சாமிகளையிந்த பூமியிலேதொழுவார்
தொழுதிழிவாய் நிலைகுலைவார் மதியழிவார்—அவர்கள்
கண்திறக்க வகைபார். 9

ஆழ-நேமிசூழுமிந்த பூமியிலே துரை, சாமிசொற்பாமணியே
நயமணியே ஜெயமணியே சுயமணியே—ஞான
நீதசிந்தா மணியே. 10

---

## 10-வது சிந்தாமணி

### மங்கள ஸ்துதி.

இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

தண்ணு ரொளிமிகுத்தத் தாரகை
கனைமுடித்தச் சென்னியே—ஞானத்
தபனனெனுந்திரு பரனையளித்திடுங் கன்னியே—வானேர்த்
தலைவியெனத்திரி யுலகமெலாம்புகழ் மன்னியே.

1

விண்ணு டரசியென வெண்ணிலா
வைமிதித்தக் காலியே—ஜன்ம
வினையணுகாதவ ளெனரவி கலையணி மேலியே—ரத்ந
விகஜித வொளிதவழ் ரதமதி லெழுஞ்ஜெய சீலியே.

2

அன்னுட் சுவீக்கினெனு மன்னர்
தவத்திலுதித்திடும் புத்ரியே—வேத
ஆகமநூலி லெலாம்புகழ்ஞான சமுத்ரியே—எங்க
ளாருயி ரேயமிழ் தேதிருவே சுமுத்ரியே.

3

பன்னுட் களிலுமுன்றன் பொன்னுர்த்
திருக்கமலவெழிற் பாதமே—பற்றும்
பாலர்களெங்களை யாள்வதுனதுகடன் நீதமே—திருப்
பாவணிபாடிடும் நாவலன் துரைசாமி போதமே.

4

த்ய தேவாதிதேவ னிர்மல
னுக்குகந்தநற் கண்மணி—வேத
நெறிமுறை படியொழு கிடவர மருள்திரு பெண்மணி—ஞான
திவள ரதிவித ரணசுப மணம்வளர் பண்மணி.

5

சத்ய வேதாகமத்தின் சர்வானு
கூலமும்நீசந் தோஷமே—திருச்
சபைத்தலை வர்கள்பரி பாலர்கட்கும்பிர காசமே—பின்னை
சந்ததந் தொழுபவர் சிந்தையிலமர்விசு வாசமே.

6

கந்தம் பரிமளித்துச் சிந்துந்தேன்
பூம்பொழில்களால் சூழவே—வேளார்
காணியெனுந்திரு மாநகர்செழித்து வாழவே—மூன்று
காலமழைத்தவி ராமற்பொழிந்துயிர்கள் வாழவே.

7

அந்த மிகுத்தெங்குமுள்ள
ஆலயங்கள் மடங்களும் வாழ்கவே—உன்றன்
ஆலயமுங்குரு மாருபதேசியும் வாழ்கவே—இத
ஞைகரணைப்பரி பாலர்களனைவரும் வாழ்கவே.

8

மங்களஞ் சத்யவேத மங்காத்
திருச்சபைக்குஞ்ஜெய மங்களம்—வேத
மன்னர்கள் பாப்பர சேந்திரர்க்குஞ் ஜெயமங்களம்—திரு
மாதவமேற்றிரா ணிகள்குரு மார்கட்கு மங்களம்.

9

மங்களஞ் சித்ரகவி நாவலன்
துரைசாமிசொலுஞ் ஜெயமங்களம்—தமிழ்
மணமலி சதுர்கவி புலவர்க ளனைவர்க்கு மங்களம்—சிந்தா
மணியிதைப் படிப்பவர் கேட்பவ ரனைவர்க்கு மங்களம்.

10

---

## வாழி விருத்தப்பண்.

ஏகயேக தேவன் திருகழல் வாழி-ஜெயசீல சபையரும் வாழி
யவிப் புவியின் திருச்சபைத் தலைவர் ஆசீர்வா தேந்த்ரரும் வாழி
பர சாள்வோர் துறவிகள் குருக்கள் புலவர்கள் சாத்ரிகள் வாழி
மரியாநா யகியின் சேயர்கள் நேயர் மகிழ்திருச் சபையும் வாழியவே.

அற்புத வலங்காரத் தசரத்நச் சிந்தாமணி
வண்ணச் சிந்துகள்
முதற் பிரபந்தம் முற்றிற்று.
29-8-1917.

## இதற்குப் பொருளுதவிசெய்த கைபொப்பகார
## தயாள சீலர்கள் பேரில்
# வாழ்த்துக் கவிகள்

அற்புத சிந்தா மணியே ஆரோக்ய மாமரி யம்மணி யுனது
ஆலயந் தேடி வந்துனைக் கண்டு அர்ச்சனைப் புரிந்துள மகிழ்ந்த
சற்குணன் கோலார் வாசன் விஸ்வாசன் நாயக மென்பவ ரின்றன்
நங்கையா ரோக்யம் மாளுக்கு நேர்ந்த நலிமிகு கொள்ளைநோயதிலே
அற்புத மாக இடைவழி தனிலோ ராபத்து மின்றிதற் காத்து
அவர்களூர்க் கொடுபோய் சேர்த்ததுமன்றி யவர்களுக் கநேகநன்மை
பற்பல சமயங் களிலும்மேசெய்தாய் பட்சத்தை யவர்மற வாமல் [கன்
பண்புட னெனைத்தன் னுடனழைத் துவந்துன் பதமலர் காணச
[செய்தனரே

### வேறு சந்தம்.

காணருமுனது பாதமலரினில் கசிந்தொழுகுஞ்செழுந் தேனதைத்
தானருந்தின தி னலெனையுமிவர் தசரத்தினசிந்தா மணியிதை
வேணரும்பொருட்ச காயஞ்செய்து விடாமலச்சிடச் செய்தனர்
வாணரும்புகழ நாயகமெனுஞ்ச காயனிவர்நிதம் வாழ்கவே.

வாழ்கவிவருட னிதற்குபொருட்பல வழங்குங்கைபொப்பநேயர்கள்
வாழ்கவிதனையச் சிடுதற்குதவியாய் வருந்தியுழைத்தச காயர்கள்
வாழ்கவிதனைக்கண் மணியெனமதித்து வாங்கிவாசிக்குஞ் சீலர்கள்
வாழ்கஇதைப்படிப் பவர்கேட்பவர்களும் வாழ்கவரமருள் வாழ்கவே

முற்றும்.